<u>2025 செப்டம்பர்  மாதம் 09– ஆம் தேதி செவ்வாய்கிழமை</u>

<u>கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி</u>

<u>எம் .சி .ஓ .பி. நெம்பர்    : 187 /2022</u>

MCOP No.: 187/2022 – அம்மாப்பொன்னு PW1 09.09.2025

க/பெ.ராஜபாண்டி

<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு, 2ம் எதிர்மனுதார் தரப்பில் குறுக்கு விசாரணை :–</u>

நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்தை நேரடியாக பார்த்த நபரை இவ்வழக்கில் நான் சாட்சியாக விசாரிக்க தயாராக உள்ளேன். விபத்து நடந்த பிறகு விபத்து நடந்த இடத்தை நான் நேரடியாக சென்று பார்க்கவில்லை. நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை நான் விபத்தை நேரடியாக பார்க்காமல், முதல் தகவல் அறிக்கையில் சொல்லியுள்ள விபரங்களின் அடிப்படையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். எனது மகன் ஓட்டிச்சென்ற இருச்சக்கர வாகனம் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் எனது மகனின் முதலாளிக்கு பாத்தியப்பட்டது, அவரின் பெயர் எனக்கு தெரியாது. எனது மகன் JCB வாகனத்தை ஓட்டினார் என்றும், அதன்மூலம் மாத வருமானம் ரூ.40,000/– வந்தது என்று சொல்லியுள்ளதற்கு ஆதரவாக ஆவணம் தாக்கல்  செய்யவில்லை என்றால் சரிதான். எனது மகன் JCB வாகனம் ஓட்டினார் என்பதை காட்டுவதற்கு அவருடைய ஓட்டுநர் உரிமத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. விபத்து நடந்த இடம் பொள்ளாச்சி என்று சொன்னார்கள். விபத்து சமயத்தில் இறந்துபோன எனது மகனுக்கு திருமணம் நடைபெறவில்லை. 2, 3, 4 மனுதாரர்களுக்கு இன்றுவரை திருமணமாகவில்லை. எனது

கணவர் இறந்துவிட்டார். எனது மகன் இருச்சக்கர வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் வாகனத்தை ஓட்டிச்சென்று விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் எனது மகன் தலைகவசம் அணியவில்லை என்றால் அணிந்திருப்பார், ஆனால் எனக்கு நேரடியாக தெரியாது. எனது மகன் ஓட்டிச்சென்ற இருச்சக்கர வாகனத்தின் மீது மோதிய செந்தில் (எ) செந்தில்குமாருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்த விபத்தில் பாலிசி விதிமீறல் உள்ளதால் 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. பல்வேறு தலைப்புகளின் கீழ் நான் கோரியுள்ள இழப்பீட்டு தொகை அதிகம் என்றும், அந்த இழப்பீட்டு தொகை எனக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல. எனது மகன் ஓட்டிச்சென்ற இருச்சக்கர வாகனத்தின் உரிமையாளர் மற்றும் காப்பீட்டு நிறுவனத்தை தரப்பினர்களாக சேர்க்காததால் நான் தாக்கல் செய்துள்ள மனு 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 09.09.2025 அன்று வியாழக்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SANKAR Digitally signed by SANKAR Date: 2025.09.09 19:01:38 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி(FAC). தேனி.
09.09.2025